## வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி

**(இனம் - 19)**

01. 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி எழுத்தறிவு வீதம் என்ற ஆய்வெல்லையில் தமிழ்நாடு கேரளத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது எழுத்தறிவு பெற்ற மாநிலமாக (ஏழு வயது மற்றும் அதற்கு மேல் வயது உள்ள மாநில மக்கள் தொகையில் 63.7%) உள்ளது. ஆண்களின் எழுத்தறிவு வீதம் 74% ஆகவும் பெண்களின் எழுத்தறிவு வீதம் 51% ஆகவும் உள்ளது. மேற்கூறிய புள்ளி விபரங்கள் மாநிலத்தின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 36% (7 வயது மற்றும் அதற்கு மேல்) எழுத்தறிவில்லாதவர்களாக உள்ளனர் என்பதைக் காட்டுகின்றது.

02. தமிழ்நாட்டில் 7 ஆண்டு மற்றும் அதற்கு மேலும் வயது உள்ளவர்களின் எழுத்தறிவு வீதத்தில் பாலின இடைவெளி, அனைத்திந்திய வீதத்திற்கு (–) 24 எதிராக (–) 23 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், பள்ளிகளில் 6–10 ஆண்டுகள் வயதுடைய குழந்தைகள் 1992–93ஆம் ஆண்டைய நிலையின்படி 10.30 இலட்சங்களாக இருக்கின்றனர். நகர்ப்புறப் பகுதிகளில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் இடையில் நின்றுவிடுவோரது பாலின இடைவெளி பெண்கள் வீதம் ஆண்கள் வீதத்தை விட முறையே (–) 25 மற்றும் (–) 1 ஆக உள்ளன. ஆதி திராவிட, ஆதி திராவிட பழங்குடி வகுப்பினர் போன்ற வசதியற்ற பிரிவினர் பொருத்தவரை சேர்க்கையின் பாலின இடைவெளி ஆதி திராவிட வகுப்பினர் (–) 15 ஆகவும் ஆதிதிராவிடப் பழங்குடி வகுப்பினர் (–) 23 ஆகவும் (பெண் வீதத்தில் ஆண் வீதத்தைக் கழிக்க) உள்ளது.

03. மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு தேசீய சராசரியைக் காட்டிலும் அதிகமாக இருந்தபோதிலும், தேசீயச் சராசரியை விட குறைவாக எழுத்தறிவு வீதமுடைய மாவட்டங்களும் உள்ளன. எழுத்தறிவு வீதம் தருமபுரி மாவட்டத்தில் 46% ஆகவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 82% ஆகவும் வேறுபடுகின்றன. தென்னார்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி, சேலம் மற்றும் பெரியார் ஆகிய 5 மாவட்டங்களும் குறைந்த எழுத்தறிவு பெற்ற பகுதிகளாக அடுத்தடுத்து அமைந்துள்ளன. பெருமளவு குறைந்த எழுத்தறிவுள்ளவையாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. வேறுவகையில் குறிப்பிட்டால் 40–60% எழுத்தறிவு வீதத்தில் 7 மாவட்டங்களும், 60–80% எழுத்தறிவு வீதத்தில் 12 மாவட்டங்களும், சென்னை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 2 மாவட்டங்களும் 80% க்கும் மேலாக முதன்மையான எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக உள்ளன. இவை எழுத்தறிவு வீதங்களில் ஏற்றத்தாழ்வு மண்டலங்களை காட்டுவதாகவுள்ளன. இவ்வாறு குறைவான எழுத்தறிவு பெற்றுள்ள மாவட்டங்கள் முழு எழுத்தறிவு என்ற இலக்கினை எட்டமுயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### திட்ட விபரங்கள்

04. குறைந்தளவு எழுத்தறிவு என்ற கஷ்டமான நிலையை முழு மற்றும் தொடர் கல்வி இயக்கங்கள் போன்ற சிறப்புத் திட்டங்கள் வாயிலாக சமாளித்து முழுஎழுத்தறிவு அடைதல் வேண்டும். இத்திட்டங்கள் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவு மன்றங்களால் செயற்படுத்தப் படுகின்றன. இதற்காகும் செலவு மைய, மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. 15–30 ஆண்டுகள் வயது தொகுதியைச் சேர்ந்த எழுத்தறிவு இல்லாதவர்கள் அனைவரையும் ஓராண்டு கால அளவுக்குள் எழுத்தறிவு பெற்றவர்களாக்குவதே முழு எழுத்தறிவு இயக்கத்தின் (மு.எ.இ) முக்கிய குறிக்கோளாகும். புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்குத் தொடர் கல்வி அளிப்பதற்காகவும், ஆரம்பகட்ட எழுத்தறிவு நிலை பெற்ற அவர்களின் திறன்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், கல்வி தொடர்திட்ட இயக்கம் 1995–96 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கிராம நிலையில் நூலகங்களைத் துவக்கி 9–14 அகவைத் தொகுதியில் உள்ளவர் களுக்காக கட்டமைக்கப்பட்ட முறைசாராக் கல்வி அளிப்பதனால் முறையான கல்விப் பாதையில் கலக்க அவர்களைத் திரும்பி அழைத்துவருதல், வட்டாரயளவில் குடும்ப அறிவுரை வழங்குதல் போன்றவை தொடர்கல்வி எழுத்தறிவு இயக்கத்தின் சிறப்பியல்புகளாகும். இதுவரை மொத்தத்தில் முழு எழுத்தறிவு இயக்கத்தின் கீழ் ரூ.44.43 கோடியும், தொடர் கல்வி திட்ட இயக்கத்தின் கீழ் ரூ.16.78 கோடியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் 76 இலக்கம் படிப்பறிவு இல்லாதவர்களும். 56 இலக்கம் இடையில் படிப்பைக் கைவிட்டவர்களும், புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களும் முறையே முழு எழுத்தறிவு இயக்கத்தின் கீழ், தொடர் கல்வி திட்ட இயக்கத்தின் கீழ்ச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

05. கிராம கள ஒருங்கிணைப்பாளர் அதாவது, கிராம நிருவாக அலுவலர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், ஊராட்சி எழுத்தாளர்கள் பொது வினியோகப் பணியார்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள், கல்லாதவர்களுடன் தனித்தனியாக தொடர்பு கொண்டு அவர்களிடம் கல்வி பயிலும் எண்ணத்தை ஏற்படுத்தவும், அணிகளாகப் பிரித்துக் கொள்வதுடன், அவர்களுக்காகத் தன்னார்வப் பயிற்றுநர்களை எற்பாடு செய்து அவர்களைச் சந்தித்து எழுத்தறிவு வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தேசீய எழுத்தறிவுக் குழுவால் குறிப்பிடப்பெற்றவாறு ஆரம்ப நிலைப்பாடங்களை 6 திங்கள் காலயளவில் மூன்று நிலைகளில் கற்று கொடுக்க வேண்டும். மாவட்ட நிலையில் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மத்தியத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், வட்டார நிலையில் வட்டார, நகராட்சி, பேரூராட்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களும், ஊர் நிலையில், ஊர் தொகுதி ஒருங்கிணைப் பாளர்களும், கூட்டுநர்களும் பலநிலைகளிலும் மாவட்ட முழு எழுத்தறிவு இயக்கத்தை அமைத்து நடத்தி கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள பணிக்கப் பெற்றுள்ளனர். இதை தவிர, மாவட்டச் செயற்பாட்டுக் குழு, பயிற்சி மற்றும் பாடத்திட்டம், இயங்குதிட்டம், ஊக்குவித்தல், செய்தி தெரிவித்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள், மாவட்ட நிலை துணை குழுக்கள், ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி குழு, கிராம/ தொகுதிக்குழு ஆகிய குழுக்கள் அவர்களுடைய அதிகார எல்லைக்குள் முழு எழுத்தயறிவு இயக்கம், தொடர் கல்வி இயக்கங்களை ஒருங்கிணைப்பதற்காகவும் அவற்றின் நடவடிக்கைகளை நிருவகிக்கவும், உருவாக்கப் பெற்றுள்ளன. மாவட்டத் தலைவர் மாவட்ட முழு எழுத்தறிவு இயக்கத்தின் தலைவராக இருப்பினும், மாவட்டத்தின் முழு எழுத்தறிவு இயக்கம் / தொடர் கல்வி இயக்கத்தின் செயற்பாட்டிற்கு முழு பொறுப்புடையவர் ஆவார். பல மாவட்டங்களில் முழு எழுத்தறிவு இயக்கம் நிறைவேற்றப்பட்டு விட்டன. ஊரக மற்றும் புறநகர்ப் பகுதிகளில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களின் தொடர் கல்வியின் பொருட்டு தொடர் கல்வி எழுத்தறிவு இயக்கமானது தொடங்கப்பட்டுள்ளது.

06. தன்னார்வ கல்வி பணித் திட்டம் என்பது மாநில அரசின் ஆதரவு பெற்ற மதுவிலக்குக் கொள்கை பரப்பு இயக்கத்துடன் இணைந்த முறைசாராக் கல்வித் திட்டமாகும். இது 1993–94 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருவதாகும். இத்திட்டத்தினால் இதுவரை சுமார் 41,295 வேலையற்ற இளைஞர்கள் பயன்பெற்றனர். 24.90 கோடி ரூபாய்கள் இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

07. சிறப்பு முறைசாராக் கல்வித் திட்டத்திற்கு மைய மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் நிதியுதவி அளிக்கின்றன. காமராசர், வ.ஊ. சிதம்பரனார், வடாற்க்காடு அம்பேத்கார், மாவட்டங்களிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் குழந்தைகள் மற்றும் சென்னை நகரத்தின் குடிசைகளில் உள்ள குழதைகளுக்காக ஆண்டிற்கு ரூ.70.80 இலட்சங்கள் மதிப்பீட்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 17557 இடையில் படிப்பை நிறுத்தியவர்கள் மற்றும் இதுவரை கல்வியைத் தொடங்காதவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

08. மேற்குறிப்பிட்ட திட்டத்துடன் சேர்த்து மலைவாழ் மக்களுக்காக முக்கியமாக கொல்லிமலை, ஏற்காடு மலை, கல்ராயன்மலை, ஜவ்வாது மலை, பச்சைமலை போன்ற இடங்களில் வாழும் பழங்குடியினர் பயன்பெறுவதற்காகச் சிறப்புத் திட்டமொன்று 92–93ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6லிருந்து 14 வயது வரையுள்ள 2000 குழந்தைகள் படிப்பை விட்டுவிடாமல் இருப்பதற்கும், எழுத்தறிவற்ற 2000 முதியோர் எழுத்தறிவு பெறுவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில் 4176 இடையில் படிப்பை விட்டு விட்டவர்களும், இதுவரை எழுத்தறிவு பெறத் தொடங்காதவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

09. சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 1992 ஆண்டில் பதிவு செய்யப் பெற்ற ஒரு சங்கத்தின் வாயிலாக மாநிலத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு அது மாவட்ட எழுத்தறிவு மன்றம் என அழைக்கப் பெற்றது (அறிவொளி இயக்கம்) இம்மன்றமானது மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (ஊராட்ச்சி வளர்ச்சி) உறுப்பினர் செயலராகவும் கொண்டு இம்மன்றம் அலுவலக அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது.

10. முழு எழுத்தறிவு இயக்கம் என்பது மாபெரும் இயக்கம் என்பதால் அதன் வெற்றிக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். வட்டார மொழியறிவு, தகவல் மற்றும் முழுயளவில் சமுதாயத்தில் பங்கேற்பு ஆகியவை அமையப்பெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்பே கல்வியை வளர்க்க சிறந்த முகமையாகும். மாவட்ட எழுத்தறிவு மன்றமானது அலுவல் சார்ந்த ஆதிக்க அமைப்பிலிருந்து விடுபட்டு மக்கள் சார்ந்த அமைப்பாக மாற்றப்பட வேண்டும் என்பது பணிக்குழுவின் கண்ணோட்டமாகும். எனவே, உடனடி நடவடிக்கையாக, மாவட்ட ஊராட்சித் தலைவரை மாவட்டக் எழுத்தறிவு மன்றத் தலைவராகவும் அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைவரையும், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சித் தலைவர்களையும் அதன் உறுப்பினர்களாக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப் படுகிறது. மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலரானவர், இதன் உறுப்பினர், செயலாளராக இருப்பார். இம்மன்றத்திற்குத் தொழில்நுட்ப உள்ளீட்டை அளிப்பதற்கு வேண்டப்படும் தேவையான மாவட்ட நிலை அலுவலர்களையும் கூட மேற் குறிப்பிட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக்கப் பெறலாம். மாவட்ட எழுத்தறிவு மன்ற ஆட்சி குழுவில் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெறும் வகையில் மாவட்ட எழுத்தறிவு மன்றத்தின் துணை விதிகள் மாற்றப்பெற வேண்டும்.

## I ஊராட்சி

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்கள் தொடங்குதல் | (அ) படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களையும் (6–14) கல்வி பயிலத் தொடங்காதவர்களையும் (15–35) கணக்கெடுக்க ஊராட்சியில் ஆய்வு மேற்கொள்ளுதல். |
| | (ஆ) பள்ளி சாராக் கல்வி மையங்களில், வட்டங்களில், தொடர் கல்வி நிலையங்களில் படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களையும், கல்வி பயிலத் தொடங்காதவர்களையும் முழுயளவில் சேர்ப்பதற்கான இயக்கம் நடத்துதல். |
| | (இ) கற்றறிந்தவர்கள், தன்னார்வப் பயிற்றுநர்கள், ஆசிரியர், பயிற்சி அளிப்பவர்கள், அமைப்பாளர்களையும் பள்ளிசாரக் கல்வி வட்டங்கள், மையங்கள் ஆகியவைகளையும் கண்டறிதல். |
| | (ஈ) படிப்பை இடையில் நிறுத்தி விட்டவர்களை/கல்வி பயிலத் துவங்காத சிறுவர்களை முறைசாராக் கல்வி நிலையங்களுக்கு அனுப்புவதற்காக பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கல். |
| | (உ) பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் செயலாக் கத்தைக் கண்காணித்தல். |
| 2. கல்வி உள்ளமைப்பை நிருவகித்தல் | (அ) ஊராட்சிக் கல்வி குழு வாயிலாக பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்களின் கட்டுமான கட்டட உள்அமைப்புகளை பராமரித்தல். |
| | (ஆ) தொடர்கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள பள்ளிசாராக் கல்வி மையங்கள், வட்டநிலையங்கள் மற்றும் கிராம நூலகங்களையும் பேணுதல். |

## II ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை (1) | | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|---|
| 1. பள்ளிசாராக் கல்வி மையங்களை/ தொடர் கல்வி நிலையங்களை நிருவகித்தல். | (அ) | தொடர் கல்விக்காக பள்ளிசாராக்கல்வி மையங்களில் /தொடர் கல்வி நிலையங்களில் படிப்பை இடையில் விட்டுவிட்டவர்களையும், கல்வி பயிலத்தொடங்காத வர்களையும் முழு அளவில் சேர்ப்பதற்கு ஊராட்சிகள் வாயிலாக இயக்கங்கள் நடத்துதல். |
| | (ஆ) | தொடர் கல்வி இயக்கத்தின் கீழ்புதிய பள்ளி சாராக் கல்வி மையங் களையும், கிராம அளவிலான நூலகங் களையும் மேம்படுத்தல் மற்றும் ஏற்கனவே கல்வி கற்றவர்களில் (படிப்பை இடையில் விட்டுவிட்டவர்கள் முதலியோர்) மீண்டு கல்லாத நிலைக்குத் திரும்புவதை தவிர்ப்பதற்குத் தொடர் கல்வி நிறுவனங்களின் விரிவான அமைப்பைப் வலுப்படுத்தல். |
| | (இ) | ஊராட்சிகள் வாயிலாகப் பள்ளிசாரா கல்வி மையங்களுக்கு, தொடர் கல்வி நிலையங்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான பொருள்களைக் கொள்முதல் செய்து பிரித்து அளித்தல். |
| | (ஈ) | ப.சா.க. மையங்களின் / தொடர் கல்வி நிலையங்களின் மற்றும் கிராமப்புற நூலகங்களின் (தொடர் கல்வியறிவு இயக்கம்) செயற்பாட்டை மேற் பார்வையிடல். |
| | (உ) | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையக் கட்டடங்களின் கட்டு மானத்தை மேற்கொள்வதுடன் பரா மரிப்பிற்காக அதனை ஊராட்சி களுக்கு மாற்றம் செய்தல். |
| 2. பணியாளர் நிருவாகம் | (அ) | முழு எழுத்தறிவு இயக்கத் திட்டங்கள் உள்பட வட்டார நிலையிலான பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மேற்பார்வை யாளர்கள், உதவித்திட்ட ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் முதலானோர்களை மேற்பார்வையிடல். |
| | (இ) | தன்னார்வப் பயிற்றுநர்கள், ஆசிரியர் பயிற்சியளிப்பவர்கள், அமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலானோர் களுக்கு நேரடியாக அல்லது ஊராட்சி மூலமாக மதிப்பூதியம் வழங்கல். |
| 3. திட்டச் செயலாக்கத்தை மறு ஆய்வு செய்தல் | (அ) | திட்டங்களின் செயலாக்கத்தை கல்வி மீதான நிலைக்குழு வாயிலாகப் காலமுறைப்படி ஆய்வு மேற்கொள்ளல். |

## III மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வியைத் திட்டமிடலும்,கண்காணித்தலும் | (அ) மாவட்டத்தில் முழுஅளவில் கல்வியறிவை எய்துவதற்கு தற்போதைய நிலை அறிக்கையையும், எதிர்கால திட்டங் களையும் தயாரித்தல். மேலும், கல்விமுன்னேற்றத்தையும் கல்வி பரப்ப ஆதரவு திரட்டினதையும் மறு ஆய்வுசெய்வ தற்குக் காலமுறைப்படி மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்தல். |
| | (ஆ) பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்ட செயலாக்கத்தை கல்வி மீதான அதன் நிலைக்குழு மற்றும் அல்லது பிறவழிகளின் வாயிலாகக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும். |
| | (இ) பள்ளிசாராக் கல்வி மையங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன், ஊராட்சிகளிட மிருந்து, ஊராட்சி ஒன்றியங்களிட மிருந்து பெறப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல். |

### நிருவாகச் சிக்கல்கள்

11. முழு எழுத்தறிவு இயக்ககம், கல்வி மேம்பாட்டுத் திட்ட இயக்கம், கல்வியறிவு பெற்ற தொண்டர் பணித் திட்டம், தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் பணியாற்றும் குழந்தைச் சிறார்களுக்கான முறைச்சாரக் கல்வித் திட்டம், பழங்குடியினருக்கான சிறப்புத் திட்டம், வித்தியாபீடம், அரசல்லாத அமைப்புகள் நடத்தும் உதவி பெறும் முறைச்சாராக் கல்வி மையங்கள் ஆகிய பல்வேறு வயது வந்தோர் முறைச்சாராக் கல்வித் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயற்பட்டு வருகின்றன. நாட்டில் வேறு சில மாநிலங்களில் உள்ளது போல அரசு சார்பற்ற நிருவனங்கள் மேற் கண்டவை போன்ற சிறப்பான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி திட்டப் பயன்களின் தாக்கத்தை தமிழ் நாட்டில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இதனை மேலும் உத்வேகப்படுத்தும் பொருட்டு அரசும் சில தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1976ஆம் ஆண்டில் வயதுவந்தோர் மற்றும் முறைச்சாராக் கல்வி இயக்ககம் அமைக்கப்பட்டது. அதற்குபின் 1979–ஆம் ஆண்டில் வட்டார, கிராம அளவில் ஆதாரப் பணியாளர்கள் எவருமின்றி மாவட்டங்களில் முதியோர் மற்றும் முறை சாராக் கல்வித் திட்டங்கள் செயற்படுவதைக் கவனிப்பதற்காக ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் ஒருவரை நியமனம் செய்ததன் மூலம் மாவட்ட அளவில் இத்துறை வலுப்பெற்றுள்ளது.

12. முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வி திட்ட இயக்கங்கள் மாவட்ட எழுத்தறிவு மன்றங்களின் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் வாயிலாகவும், வட்டாரநிலையில் முழு எழுத்தறிவு இயக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்கும் கண்காணிப்பதற்கும் வட்டாரதிட்ட ஒருங்கிணைப்பாளர், மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோரைக் கொண்ட வட்டார நிலைக்குழு உள்ளது.

13. ஒருங்கிணைப்பாளர், வருவாய் ஆய்வாளர், ஊரக நல அலுவலர்கள், வேளாண்மை, வேளாண்மை பொறியியல் துறைகளிலிருந்தும் பிரதி நிதிகளை வட்டார நிலையில் இத்தகைய திட்டங்களில் ஈடுபடுத்தி வட்டார நிலைக் குழுவின் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். கிராம நிலையில் கிராம நிருவாக அலுவலர்கள், மதிய உணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், ஊராட்சி எழுத்தர்கள், பொது வினியோக திட்ட பணியாளர்கள் ஆகியோர் கிராம ஒருங்கிணைப்பாளர்களாகவும் திட்டத்தின் செயற்பாட்டுப் பணியில் ஈடுபாடுடைய கிராம நிலைக் கல்விக் குழுக்களின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

14. தற்போதைய முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வி திட்ட இயக்கம் இதர கல்வியறிவு திட்டங்களுக்கு போதுமான நிதி அளிக்கப்பட்டிருந்தும் வட்டார நிலையில் இத்திட்டத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பு இல்லாததாலும் முழுநேர முதியோர் கல்வி அமைப்பு இல்லாததாலும் எதிர்பார்த்த அளவிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு குழுக்கள் இத்திட்டங்களின் உண்மையான பயனை போதுமான அளவில் அடையவில்லை. எனவே ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி மேற்கண்ட குறைபாடுகளை களையலாம். அதாவது கிராம நிலையில் ஏற்படுத்தப்படும் அனைத்து கிராம நிலைக்கல்வி குழுக்களுக்கும் கிராம ஊராட்சி தலைவர்களை தலைவர்களாக, நியமனம் செய்தல் வேண்டும். அதுபோலவே மாவட்டங்களில் செயற்படுத்தப் பெறும் வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வித் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட மாவட்டக் கல்வியறிவு மன்றத்திற்கும், பிற மாவட்ட நிலைக் கல்வி குழுக்களுக்கும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், தலைவர்களாகவும், மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர்கள் உறுப்பினர் சபை கூட்டுநர்களாகவும் இருப்பர். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட வட்டாரஅளவில் நிரந்தர வயது வந்தோர் கல்வி இயந்திரம் ஒன்றினை உருவாக்கி உதவி முதியோர் கல்வி அலுவலர் ஒருவரை நியமித்து இத்திட்டத்திக்கு நிர்வாக ஆதரவு ஏற்படுத்தி தரவேண்டும். மாநில அளவில் முழு எழுத்தறிவு இயக்கம் மற்றும் தொடர் கல்வி இயக்கம் ஆகியவற்றை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில அளவிலான கல்வி பரப்பு அதிகாரக்குழுவில் உறுப்பினராக மாவட்ட ஊராட்சி தலைவர்கள் மக்கள் பிரதிநிதியாக கலந்து கொண்டு செயலாற்றுவர்.

## நிதிச் சிக்கல்கள்

15. 1996–97 ஆம் ஆண்டு திட்டத்தில் முதியோர் மற்றும் முறைசாராக் கல்விக்கென ரூ. 24.15 இலட்சங்கள் திட்டம் சாரா இனத்திலும் ; ரூ.448.46 இலட்சங்கள் திட்ட செலவினமாகவும் ; ரூ 232.01 இலட்சங்கள் மைய அரசு பொருப்பேற்கும் (100 சதவிதிதம்) திட்டத்திலும் மற்றும் ரூ, 42.52 இலட்சங்கள் (50:50) மாநில மைய அரசு பொருப்பேற்கும் திட்டத்திலுமாக மொத்தம் ரூ. 725.88 இலட்சங்கள் ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதில் பெருவாரியான தொகை திட்ட ஒருங்கிணைப்பாளர், ஆசிரியர், தன்னார்வளர் பயிற்றுனர் அமைப்பாளர்கள்/ மேற்பார்கையாளர்களுக்கும் ஊதியம்/மதிப்பூதியமாக வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில திட்டக்குழுவின் உபகுழுவானது மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியங்களை உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிட வேண்டுமென்று பரிந்துரைக்கின்றது. எனவே முறைசாராக் கல்வி திட்டம் சிறப்பாக செயல் பட வேண்டுமெனில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதற்கான நிதி ஆதாரங்களை அளிக்கும் பொருட்டு ஒரு முறையான மானிய உதவி வழங்கும் வகையினை ஏற்படுத்திட வேண்டும் என்று விரும்புகின்றது. மாநில நிதி ஆணையம் முறை சாராக் கல்வி திட்டம் உட்பட கல்வி திட்டங்களுக்காக மானியம் வழங்கும் பொருட்டு தேவையான வழிகாட்டு முறைகளை வகுத்து பரிந்துறைத்திருக்குமென நம்பப்படுகிறது.

**சட்டச் சிக்கல்கள்**

16. மைய அரசு வெளியிட்ட வழிகாட்டு நெறி முறைகளுக்கு கிணங்க, தமிழக அரசு ஆணை எண் 745, கல்வி (V II) நாள் 20.8.1992–ன் படி தமிழ்நாடு எழுத்தறிவு அதிகாரக்குழு என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. இக்குழுமம் ஒரு மன்றத்தினையும், ஒரு செயற்குழுவையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மாறிவரும் சூழலில் இவ்வாணையத்தில் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கும், ஒரு சில ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளித்திடும் வகையில் மேலே குறிப்பிட்ட அரசு ஆணையில் தேவையான திருத்தங்களை செய்திட வேண்டுமென மாநிலத்திட்டக் குழு பரிந்துரைக்கின்றது.

17. மாவட்ட அளவில் முழு எழுத்தறிவு திட்டமானது சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரை தலைவராக கொண்டு செயல்பட்டு வரும் மாவட்ட எழுத்தறிவு மன்றங்களால் செயற்படுத்தப் படுகின்றன. இந்த மாவட்ட எழுத்தறிவு மன்றங்களில் மாவட்ட ஊராட்சி தலைவரை தலைவராகவும், மாவட்ட திட்டகுழுவின் தலைவரை இணைத் தலைவராகவும் ஊராட்சி மற்றும் நகர்புற ஊராட்சி அமைப்புகளின் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் இம்மாவட்ட எழுத்தறிவு மன்றங்களின் / ஆட்சி மன்றகுழுக்களில் நியமித்திடும் வகையில் தேவையான மாற்றங்கள் உள் விதிகளில் செய்திட வேண்டுமென பரிந்துரைக்கிறது. மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் இம்மன்றத்தின் உறுப்பினர் – செயலராக நியமிக்கப் பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கிறது.